


20. 08. 2025

தலைப்பு செய்திகள்

- இணையதள விளையாட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு மசோதாவை மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்வினி வைஷ்ணவ் இன்று மக்களவையில் தாக்கல் செய்தார்.
- 130-வது அரசியல் சாசன சட்டத்திருத்த மசோதாவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று மக்களவையில் அறிமுகம் செய்யவுள்ளார்.
- தேசிய ஜனநாயக கூட்டணியின், குடியரசு துணைத்தலைவர் வேட்பாளர் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்புமனுவை இன்று தாக்கல் செய்தார்.
- சுதந்திரபோராட்ட வீரர் ஒண்டிவீரனின் 254-வது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.
- பல்கேரியாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்மித் நாகல் இன்று களமிறங்கிறார்.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖

நாடாளுமன்றம்

பீஹார் வாக்காளர் திருத்த பட்டியல் விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் எதிர்கட்கிகளின் அமளி காரணமாக நாடாளுமன்ற இருஅவைகளும், இன்று பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டன.

எதிர்கட்சிகளின் அமளி காரணமாக மக்களவை நண்பகல் வரை ஒத்திவைக்கப்பட்ட நிலையில் மீண்டும் அவை கூடியபோது மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.அஷ்விணி வைஷ்ணவ் அமளியினூடே இணையதள விளையாட்டுகள் ஒழுங்குமுறை மசோதாவை தாக்கல் செய்தார்.

மின்னணு விளையாட்டுகளையும், இணையதளத்தின் சமூக விளையாட்டுகளையும் ஊக்குவிக்கும் அதே வேளையில் பணம் சார்ந்த ஆபத்தான ஆன்லைன் விளையாட்டுகள், விளம்பரங்கள் அதுசார்ந்த பண பரிவர்த்தனைகளை தடைசெய்ய இம்மசோதா வழிகோலுகிறது.

இணையதள விளையாட்டுகளுக்கான ஒருங்கிணைந்த கொள்கைகளை உருவாக்குவதற்கான ஆணையத்தை நியமனம் செய்யவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

நிதி மேலாண்மை மற்றும் நாட்டின் இறையாண்மையை பாதுகாப்பதை இலக்காக கொண்டு தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மசோதா இளையோர்கள், தனிநபர்கள் உள்ளிட்டோர் முறையற்ற விளையாட்டுகளில் ஈடுபடுவதை தடுக்க வகை செய்யப்பட்டுள்ளது.

ஆன்லைன் விளையாட்டுகள் தொடர்பான அரசின் சட்டத்தை மீறுவோருக்கு 3 ஆண்டுகள் சிறை தண்டனை மற்றும் ஒருகோடி ரூபாய் வரை அபராதத்திற்கும் இம்மசோதா வழிகோலுகிறது.

இதனிடையே எதிர்கட்சிகளின் நடவடிக்கைக்கு ஆட்சேபம் தெரிவித்த நாடாளுமன்ற விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. கிரண் ரிஜுஜு கடந்த 3

நாட்களாக அவையில் எந்தவித சிறப்பு விவாதமும் நடைபெற எதிர்கட்சிகள் ஒத்துழைக்கவில்லை என்று குற்றம் சாட்டினார்.

சர்வதேச விண்வெளி மையத்திற்கு வெற்றிகரமாக சென்று திரும்பிய குரூப் கேப்டன் சுபான்ஷு ஷுக்லாவின் சாதனைகளுக்கு பாராட்டு தெரிவிப்பதற்கான விவாதத்திற்கும் எதிர்கட்சிகள் ஒத்துழைக்காமல் அமளியில் ஈடுபடுவது துரதிஷ்டவசமானது என்று குற்றம் சாட்டினார்.

எதிர்கட்சிகள் அமைச்சரின் வேண்டுகோளுக்கு செவிசாய்க்காமல் தொடர்ந்து அமளியில் ஈடுபடவே மக்களவை பிற்பகல் 2 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.

மாநிலங்களவையிலும் பீஹார் வாக்காளர் திருத்த விவகாரம் உள்ளிட்ட பிரச்சனைகளில் அமளி நிலவவே மாநிலங்களவையும் முதலில் நண்பகல் வரையிலும், பின்னர் பிற்பகல் 2 மணிவரையிலும் ஒத்திவைக்கப் பட்டது.

இந்நிலையில் 130-வது அரசியல் சாசன சட்டத்திருத்த மசோதாவை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித்ஷா இன்று மக்களவையில் அறிமுகம் செய்கிறார்.

❖❖❖❖❖❖

சி.பி. ராதாகிருஷ்ணன்

குடியரசு துணைத்தலைவர் தேர்தல் அடுத்தமாதம் 9-ம் தேதி நடைபெறவுள்ள நிலையில் தேசிய ஜனநாயக கூட்டணி வேட்பாளராக போட்டியிடும் திரு. சி.பி. ராதாகிருஷ்ணன் வேட்புமனுக்களை இன்று தாக்கல் செய்தார்.

பிரதமர் திரு. நரேந்திரமோடி, மத்திய அமைச்சர்கள் திரு.அமித்ஷா, திரு.ராஜ்நாத்சிங், திரு.ஜே.பி.நட்டா, திரு. கிரண் ரிஜுஜு, லோக் ஜன்சக்தி கட்சி தலைவர் திரு. சிராக் பாஸ்வான் ஐக்கிய ஜனதாதள் தலைவர் திரு. ராஜீவ் ரஞ்சன் சிங் தேசியவாத காங்கிரஸின் திரு. பிர.ஃபுல் பட்டேல் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

INDI கூட்டணி வேட்பாளரான திரு. சுதர்சன்ரெட்டி நாளை மனுதாக்கல் செய்கிறார்.

வேட்புமனு தாக்கல் நாளையுடன் முடிவடையும் நிலையில், நாளைமறுநாள் அவை பரிசீலிக்கப்படுகின்றன. அவற்றை திரும்பப்பெற வரும் 25-ம் தேதி கடைசிநாளாகும்.

❖❖❖❖❖❖

ஜோதிர் ஆதித்ய சிந்தியா

அகண்ட அலைவரிசை சேவையில் நம்நாட்டின் குறிப்பிடத்தக்க வளர்ச்சி UPI பணபரிவர்த்தனை மற்றும் மின்னணு ஆளுமை குறித்த மத்திய தொலைத்தொடர்பு அமைச்சர் திரு. ஜோதிர் ஆதித்யா சிந்தியாவின் கட்டுரையைப் பிரதமர் திரு.நரேந்திரமோடி தமது சமூக வலைதளப்பதிவில் பகிர்ந்துள்ளார்.

தொலைத்தொடர்பில் அடுத்தக்கட்ட வளர்ச்சி என்ற தலைப்பில் இடம்பெற்றுள்ள இந்த கட்டுரையில் இணையதளத்தின் படிப்படியான வளர்ச்சியையும், உலகளவில் அதன் தாக்கத்தையும் திரு.சிந்தியா எடுத்துரைத்துள்ளதை பிரதமர் பாராட்டியுள்ளார்.

5-ஜி அலைக்கற்றை, செயற்கை நுண்ணறிவு, சைபர்பாதுகாப்பு, இணையதளத்தின் வளர்ச்சி போன்றவை தேசத்தை புதிய பரிணாமத்திற்கு முன்னெடுத்துச் சென்று, உலகளாவிய முன்னோடி நாடாக முன்னிறுத்தும் என்று திரு. ஜோதிர் ஆதித்யா அந்த கட்டுரையில் தெரிவித்திருப்பதை பிரதமர் சுட்டிகாட்டியுள்ளார்.

❖❖❖❖❖❖

ராஜீவ்காந்தி

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தியின் 81-வது பிறந்த தினத்தை ஒட்டி பிரதமர் திரு. நரேந்திரமோடி அன்னாருக்கு அஞ்சலி செலுத்தியுள்ளார்.

புதுதில்லியில் உள்ள ராஜீவ்காந்தியின் நினைவிடமான வீர்பூமியில் காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே, அக்கட்சியில் பொதுசெயலாளர் திருமதி. பிரியங்கா காந்தி உள்ளிட்டோர் மலரஞ்சலி செலுத்தினர்.

சென்னையில் காங்கிரஸ் தலைமையகமான சத்தியமூர்த்தி பவனில் உள்ள அவரது திருவுருவப் படத்திற்கும்,

ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ்காந்தி நினைவிடத்திலும் காங்கிரஸ் கட்சியினர் மலர்த்தூவி மரியாதை செலுத்தினர்.

❖❖❖❖❖❖

ஒண்டிவீரன்

சுதந்திரபோராட்ட வீரர் ஒண்டிவீரனின் 254-வது நினைவு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் விடுதலைப்போரில் ஆங்கிலேயர்களை எதிர்த்து எதிரிகளுக்கு சிம்மசொப்பனமாக திகழ்ந்த மாவீரன் ஒண்டிவீரனின் நினைவை போற்றி வணங்குவதாக குறிப்பிட்டார்.

முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில் ஆங்கிலேயருக்கு கப்பம்கட்ட மறுத்து அந்நிய ஆதிக்கத்திற்கு சவால் விட்ட மாவீரன் ஒண்டி வீரனின் நினைவுநாளில் அன்னருக்கு வீர வணக்கம் செலுத்துவதாக குறிப்பிட்டுள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம் பாளையங்கோட்டையில் உள்ள மணிமண்டபத்தில் தமிழக அரசின் சார்பில் சட்டப்பேரவைத் தலைவர் திரு.அப்பாவு, மாநில அமைச்சர் திரு. மதிவேந்தன், ஆட்சித்தலைவர் திரு. சுகுமார் ஆகியோர் அவரது திருவுருவச்சிலைக்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் அன்னாரது திருவுருவச்சிலைக்கு பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு.நயினார் நாகேந்திரன் மாலை அணிவித்தார்.

❖❖❖❖❖❖

நயினார் நாகேந்திரன்

குடியரசு துணைத்தலைவர் தேர்தலில் தமிழ்நாட்டை சேர்ந்து திரு. சி.பி. ராதாகிருஷ்ணனுக்கு திமுக ஆதரவு தெரிவிக்காவிட்டால் தமிழ் தொடர்பான அக்கட்சி தலைவரும் முதலமைச்சருமான திரு. மு.க. ஸ்டாலினின் கூற்று பொய்யாகிவிடும் என்று பி.ஜே.பி. மாநிலத்தலைவர் திரு. நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

நெல்லை மாவட்டம் பாளையங்கோட்டையில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், பி.ஜே.பியின் பூத் கமிட்டி மாநாடு அரசியலில் மிகப்பெரிய திருப்புமுனையை ஏற்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

தூய்மை பணியாளர்களின் கோரிக்கைக்கு செவிசாய்க்காத திமுக அரசு அவர்களை மோசமான நிலைக்கு தள்ளியுள்ளதாக அவர் குற்றம் சாட்டினார்.

கேள்வி ஒன்றிற்கு பதிலளித்த அவர், பொதுவாழ்க்கையில் இருப்பவர்கள் நேர்மையானவர்களாக இருக்கவேண்டும் என்பதற்காகவே, 130-வது அரசியல் சாசன சட்டத்திருத்த மசோதா மக்களவையில் அறிமுகம் செய்யப்படுவதாக குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖

நிர்மலா சீதாராமன்

சரக்கு சேவைவரி கட்டமைப்பில் மேற்கொள்ளப்படும் சீர்த்திருத்தங்கள் குறித்து மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் அமைச்சர்கள் குழுவுடன் இன்று ஆலோசனை மேற்கொள்கிறார்.

புதுதில்லியில் நடைபெறும் இந்த ஆலோசனை கூட்டத்தில் வரிகட்டமைப்பை எளிமையாக்குவதற்கான நிதியமைச்சகம் முன்வைத்துள்ள பரிந்துரையில் 5 சதவிகிதம் மற்றும் 15 சதவிகிதம் என ஈரடுக்கு வரி கட்டமைப்பு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

அத்தியாவசியமல்லாத சில பொருட்களுக்கு 40 சதவிகித சிறப்பு வரிவிதிப்பு குறித்தும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ள 12 மற்றும் 28 சதவிகித அடுக்குகள் நீக்கப்பட்டுள்ளதால் மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்கள் மற்றும் சேவைகள் உறுதி செய்யப்படும் என்று மத்திய நிதியமைச்சகம் தெரிவித்துள்ளது.

❖❖❖❖❖❖

நிறுவன நாள்

இந்திய ராணுவத்தின் மெட்ராஸ் ரெஜிமண்டின் 250-வது நிறுவன நாளையொட்டி கேரள மாநிலம் பன்கோடு ராணுவ தளத்திலிருந்து படைவீரர்களின் இருசக்கர வாகன யாத்திரை இன்று தொடங்கியது.

தமிழகத்திலும், கேரளத்திலும் ஆயிரத்து 359 கிலோமீட்டர் தொலைவிற்கு, 23 இடங்களுக்கு இந்த இருசக்கர வாகன பேரணி பயணிக்கின்றது.

ராணுவத்தின் வீர தீரத்தை பறைசாற்றுவதோடு தென்னிந்தியாவிலுள்ள பழம்பெரும் ராணுவ வீரர்களை கவுரவிக்கும் வகையில் இந்த விழிப்புணர்வு பேரணியை படைவீரர்கள் மேற்கொண்டுள்ளனர்.

❖❖❖❖❖❖

கலந்தாய்வு

தமிழ்நாட்டில் பொறியியல் மாணாக்கர் சேர்க்கைக்கான துணை கலந்தாய்வு நாளை தொடங்கி 3 நாட்கள் இணையவழியில் நடைபெறவுள்ளது.

இதற்கு 16 ஆயிரம் மாணாக்கர் விண்ணப்பித்துள்ளனர்.

25, 26-ம் தேதிகளில் சிறப்பு கலந்தாய்வு நடைபெறும்.

❖❖❖❖❖❖

பழனிவேல் தியாகராஜன்

மதுரை மத்திய சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தைக்கால் தெருவில் 12 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நியாயவிலை கடை கட்டிடத்தை மாநில தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.பழனிவேல் தியாகராஜன் இன்று திறந்துவைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் திரு.பிரவீன் குமார் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

❖❖❖❖❖❖

இருவரி

புதுக்கோட்டை அரசு மகளிர் கலைக்கல்லூரி வளாகத்தில் வரும் சனிக்கிழமை தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ளது.

இதில் 100-க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் பங்கேற்று பத்தாயிரத்திற்கும் அதிகமானோரை வேலைக்கு தேர்ந்தெடுக்க உள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. அருணா தெரிவித்துள்ளார்.

பெரம்பலூரில் தனியார்த்துறை வேலைவாய்ப்பு முகாம் வரும் 22-ம் தேதி நடைபெறுகிறது.

இம்முகாமில் கலந்துகொள்ளும் வேலை அளிப்பவர்கள் தங்களது நிறுவன விவரங்களை இணையதளத்தில் பதிவுசெய்யுமாறு ஆட்சித்தலைவர் திரு.அருண்ராஜ் கேட்டுக்கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖

மேட்டூர்

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து இன்று நண்பகலில் 87 ஆயிரத்து 614 கனஅடியாக குறைந்துள்ளதை அடுத்து அணையிலிருந்து வெளியேற்றப்படும் தண்ணீரின் அளவு 55 ஆயிரம் கனஅடியாக குறைக்கப்பட்டுள்ளது.

அணை தற்போது தனது முழு கொள்ளளவான 120 அடியை எட்டியுள்ளது.

இதனிடையே நாமக்கல் மாவட்டம் குமாரபாளையம் காவிரி ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டு 25 வீடுகளை வெள்ளநீர் சூழ்ந்ததால் அப்பகுதிமக்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

விருதுநகர் வாய்ஸ்

விருதுநகர் மாவட்டம் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதியில் காட்டுத்தீ ஏற்பட்டுள்ளதால் சதுரகிரி சுந்தரமகாலிங்கம் கோவிலுக்கு பக்தர்கள் செல்ல இன்று தடைவிதிக்கப்பட்டுள்ளது

இதுகுறித்து எமது செய்தியாளர்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

பழனி வாய்ஸ்

பழனி அருள்மிகு தண்டாயுதபானி சுவாமி திருக்கோவிலில் 35 நாட்களுக்கு பிறகு ரோப் கார் சேவை இன்று மீண்டும் பக்தர்களின் பயன்பாட்டிற்கு வந்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖

டென்னிஸ்

பல்கேரியாவில் நடைபெறும் சேலஞ்சர் டென்னிஸ் ஆடவர் ஒற்றையர் காலிறுதிக்கு முந்தைய சுற்றில் இந்தியாவின் ஸ்மித் நாகல் - BOSNIA வின் Andrej Nedic –ஐ இன்று எதிர்கொள்கிறார்.

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖